மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி (தன்னாட்சி), தஞ்சாவூர் - 613 005

தன்னாட்சிப் பருவத் தேர்வுகள் - டிசம்பர் 2020

எண்: 16/2020-21

சுற்றறிக்கை

நாள்: 10.12.2020

1. அனைத்து இளநிலை மற்றும் இறுதியாண்டு முதுநிலை மாணவர்களுக்கான முதல், மூன்றாம் மற்றும் ஐந்தாம் பருவ நடப்புத் தாள்களுக்கு பருவத் தேர்வுகள் 14.12.2020 முதல் 22.12.2020 வரை இணைய வழியாக நடத்தப்படும்.
2. வினாத்தாள் வடிவத்தில் ஏதும் மாற்றமில்லை.
   - பகுதி - அ (10 x 2 = 20) (No choice)
   - பகுதி - ஆ (5 x 5 = 25) (Either or pattern)
   - பகுதி - இ (3 x 10 = 30) (Out of 5)
3. கல்லூரி இணைய தளம் www.rsgc.ac.in மற்றும் துறைத்தலைவரின் Whatsapp எண்ணிற்குத் தேர்வு வினாத்தாள் காலை 9.00 மணிக்கு வெளியிடப்படும். அதனைத் தனியே உங்கள் கைப்பேசி / கணினி / தாளில் பதிவுவிறக்கம் செய்துகொள்ளவும்.
4. தேர்வு காலை 9.30 மணி முதல் 12.30 மணி வரை 3 மணி நேரம் நடைபெறும்.
5. வெள்ளை நிற A4 தாள்களில் விடைகளை எழுதவேண்டும். விடைத்தாளின் முதல் பக்கத்தில் தேர்வு எழுதும் மாணவரின் பெயர், பதிவு எண், தேர்வு நாள், வகுப்பு, தாளின் குறியீடு, தாளின் தலைப்பு மற்றும் விடையளிக்கப்பட்ட மொத்த பக்கங்களின் எண்ணிக்கையைக் குறிப்பிட வேண்டும். அனைத்துத் தாள்களிலும் பக்கம் எண் மற்றும் பதிவு எண்ணைக் குறிப்பிடவும். விடைத்தாள்களைக் கறுப்பு நிற மையினால் எழுதுவது நலம்.
6. விடைத்தாள்களை முழுமையாக Scan செய்து தேர்வுக் கண்காணிப்பாளர் தரும் மின்னஞ்சல் முகவரியிலோ / கூகுல் ஃபார்ம் (Google Form) வழியாகவோ குறித்த நேரத்தில் அனுப்பிவைக்க வேண்டும். விடைத்தாள் அனுப்பிவைக்காத மாணவர்கள் தேர்வு எழுதத் தவறிய மாணவர்களாக அறிவிக்கப்படுவார்கள்.
7. மாணவர்கள் தேர்வை மதியம் 12.30 மணிக்குள் முடித்து, விடைத்தாள்களை வரிசைப்படுத்தி அதனை Scan செய்து தங்களின் பதிவெண்ணைக் கோப்புப் (File Name) பெயராகக் கொண்டு மதியம் 2.30 மணிக்குள் மின்னஞ்சல் முகவரியிலோ / தரப்படும் கூகுல் ஃபார்ம் (Google Form) வழியாகவோ சார்ந்த துறைப் பேராசிரியருக்கு அனுப்பிவைக்க வேண்டும்.
8. தேர்வு வினாத்தாள் பதிவிறக்கம் செய்ய முடியாத மாணவர்கள் உடனடியாகத் தேர்வுக் கண்காணிப்பாளர் அலைபேசியைத் தொடர்பு கொண்டு வினாத்தாளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
9. மாற்றுத் திறனாளி மாணவர்கள் தங்களுக்குத் தேர்வு எழுதத் தகுந்த உதவியாளர்களைத் தாமே தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம். அவர்களுக்குத் தாள்களை அனுப்ப 1 மணி நேரம் கூடுதல் அவகாசம் அளிக்கப்படும்.
10. இப்பெருந்தொற்றுக் காலத்தில் மாணவர்களின் நேர்மையை மதித்து அவர்களுக்கு வீட்டிலிருந்தே தேர்வு எழுதத் தரப்பட்டிருக்கும் சுதந்திரத்தைப் பயன்படுத்தி, முறைகேட்டில் ஈடுபடாமல் தேர்வு எழுதக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். எந்த ஒரு மாணவரும் விடுபடாத வண்ணம் மாணவர்களோடு தொடர்பில் இருந்து மாணவர்கள் 100 விழுக்காடு தேர்வு எழுதுவதை உறுதி செய்யுமாறு சார்ந்த துறைப் பேராசிரியர்கள் வேண்டப்படுகிறார்கள்.
11. முதுநிலை முதலாமாண்டு மாணவர்களுக்கான பருவத் தேர்வுகள் 28.12.2020 தொடங்கி தனியே இணைய வழியில் நடைபெறும். அவர்களுக்குத் தனி கால அட்டவணை தனியே வெளியிடப்படும்.
12. தேர்ச்சி பெறாத பருவத் தேர்வுத் தாள்களுக்கு விண்ணப்பித்த மாணவர்களின் பெயர்ப் பட்டியல் கல்லூரி இணைய தளத்தில் பின்னர் வெளியிடப்படும். அவர்களுக்குத் தனி கால அட்டவணை தனியே வெளியிடப்படும்.

தேர்வு நெறியாளர்
மன்னர் சரபோஜி அரசு கல்லூரி (தன்னாட்சி)
தஞ்சாவூர்-613 005.

முதல்வர் 10/12/20
மன்னர் சரபோஜி அரசு கல்லூரி (தன்னாட்சி)
தஞ்சாவூர்-613 005.